Arimaa Nokku

20:1 சனவரி 2026

ISSN 2320-4842 (Print)
ISSN 3049-2688 (Online)

# அரிமா நோக்கு

# ARIMAA NOKKU



சுனைவாய்ச் சிறுநீரை எய்தாதென் றெண்ணி
பிணைமான் இனிதுண்ண வேண்டி - கலைமாதன்
கள்ளத்தின் ஊச்சும் சுரம் என்பர் காதலர்
உள்ளம் படர்ந்த நெறி. (ஐந்திணை ஐம்பது 38 - மாறன் பொறையனார்)

மொழி, இலக்கியம், கலை, பண்பாடு, வரலாறு, மெய்யியல், அறிவியல்சார் பண்பாட்டுக் காலாண்டிதழ்.

INTERNATIONAL QUARTERLY ON LANGUAGE, LITERATURE, ART, CULTURE AND SCIENCE

International Research Journal Since 2007.
Peer Reviewed Refereed, International Journal

International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

அரிமா நோக்கு
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

ISSN: 3049-2688 (Online)

அரிமா நோக்கு

ஆசிரியர்
தமிழ்ச் செம்மல்
பேராசிரியர் முனைவர்
இரா. பன்னிருகைவடிவேலன்

ஆசிரியர் குழு
நா. கணேசன் (அமெரிக்கா)
நா. சுப்பிரமணியன் (கனடா)
பொன். செல்வகணபதி
ஒப்பிலா மதிவாணன்
சீதாலட்சுமி (சிங்கப்பூர்)
மு. பரமசிவம் (மலேசியா)
அப்பாசாமி முருகையன் (பிரான்ஸ்)
வெ. முருகன்
மனோன்மணி தேவி (மலேசியா)
பத்மாவதி விவேகானந்தன்
மருதூர் அரங்கராசன்
பெ. இலக்குமிநாராயணன்
கோ. பழனி
மு. வையாபுரி
சி. சிதம்பரம்
பா. விஜயகுமார்
ஹெப்சி ரோஸ் மேரி
ச. திருநாவுக்கரசு
ப. குமார்
கி. துர்காதேவி
உ. கருப்பத்தேவன்

ஓவியர்
சுபா. முனிவேல்
அ. கார்த்திக் தங்கராஜன்

அறிவுரைக் குழு
இந்தியாவிலும் அயல் நாடுகளிலும் உள்ள தமிழியல் அறிஞர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் படைப்பாளிகள்

பதிப்பாசிரியர்
இரா. பன்னிருகைவடிவேலன்
+91 91766 30415

# பொருளடக்கம் CONTENTS

திரைப்பட, ராப் பாடல்களும் மொழி வகைகளும் - ஒரு பார்வை
சீதா லட்சுமி 05-22

நாட்டுப்புற மக்களின் விடுகதைகள் விளக்கம்
இ. சீத்தா - ஆ. பாப்பாத்தி 23-27

பழந்தமிழர் வாழ்வில் நாட்டுப்புற நம்பிக்கைகள்
கு. ரேவதி - முனைவர் ந. மு. கவிதா 28-31

தமிழ்நாட்டில் இடஒதுக்கீடு
சு. ரகு - முனைவர் இர. சாம்ராஜா 32-36

சங்க இலக்கியமும் இயற்கை சூழ்ந்த மலைகளும்
செ. ஷீலா - முனைவர் தோ. இராஜம் 37-42

ஒன்றொழிப் பொதுச்சொல்லில் குறியீடு
செ. வசந்தி - முனைவர் ப. அலிஸ் ராணி 43-45

இராமசரிதத்தில் பழந்தமிழ் மெய்மயக்கக் கூறுகள்
அனுசுயா. இர - முனைவர் வே. இரவி 46-51

கள்ளிக்காட்டு இதிகாசத்தில் கூறப்படும் அன்பின் தன்மை
இ. மணிகண்டன் - மோ. மீனாட்சி 52-55

சு. சமுத்திரம் நாவல்களில் பெண்ணியச் சிந்தனைகள்
அ. ராமதாஸ் - முனைவர் ப. கோடித்துறை 56-62

தமிழ் இலக்கிய வரலாற்றில் வில்லுப்பாட்டு சார்ந்த பதிவுகள்
ஆ. மோகனலட்சுமி - முனைவர் செ. மார்க்கண்டன் 63-66

ஏற்றத் தாழ்வுக்கு எதிரான வள்ளலார்
இரா. பாரதி - முனைவர் செ. பாலு 67-70

சந்திரகாந்தன் படைப்புகளில் பெண்ணியச் சிந்தனை
சி. மகேந்திரன் - முனைவர் சு. இராசாராம் 71-75

ஐந்திணை எழுபது முல்லைத்திணை தலைவி கூற்றில் உவமைப் பயன்பாட்டு வரையறை
அ. அனுசங்கவி - முனைவர் மு. சுதா 76-79

திருச்சிராப்பள்ளியில் பீடித் தொழிலும் முஸ்லிம் பெண் பீடித் தொழிலாளர்களும் - அ. ஜவஹர் பாஷா
முனைவர் அ. சையத் ஜாகீர் ஹசன் 80-84

முல்லைப்பாட்டு உணர்த்தும் தலைவன் தலைவி உறவுநிலை
ஆ. பிரவீணா - முனைவர் சொ. சுரேஷ் 85-87

பூ நெஞ்சத் தீ சிறுகதையில் சமூகமும் வாழ்வியலும்
சு. சசிக்குமார் - முனைவர் மு. சுதா 88-91

வாய்மொழி இலக்கியங்களும் வாழ்க்கை வட்டச் சடங்குகளும் - செந்துறை வட்டம்
செ. மோகன் - முனைவர் சீமான். இளையராஜா 92-95

நற்றிணையில் வகைமைநோக்கில் உள்ளுறை உவமம்
த. நந்தினிப்பிரியா - முனைவர் சா.பெரியநாயகி 96-99

சிலப்பதிகாரத்தில் குன்றக் குரவர்களின் முருகன் வழிபாடு
ந. தேவிகா - சு. வடிவாம்பிகை 100-105

கிராமிய விளையாட்டுகளும் சிறார்களின் வாழ்வியலும்
கா. நாகம்மாள் - முனைவர் செ. மார்கண்டன் 106-108

சிலப்பதிகார மதுரைக் காண்டத்தில் இளங்கோவின் காப்பிய நோக்கமும் பாத்திரப் படைப்புகளும் - நாகேஸ்வரி
ஸ்ரீகுமரகுரு - முனைவர் ச. செந்தில்குமார் 109-113

International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 - 1 Jan - Mar 2026

Published on 14, Jan - Mar 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# தமிழ் இலக்கிய வரலாற்றில் வில்லுப்பாட்டு சார்ந்த பதிவுகள்

ஆ. மோகனலட்சுமி

முனைவர் செ. மார்க்கண்டன்
இணைப் பேராசிரியர், நெறியாளர், தமிழ் துறை வேல்ஸ் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை

## முன்னுரை

வில்லுப்பாட்டு தமிழன் தன் தொன்மைக் கலைகளுள் ஒன்றாக விளங்குகின்றது. நாட்டுப் பாடல் வகைகளில் ஒன்றாகக் கருதப்படுகின்றது. இயலும், இசையும் நாடகமும் கலந்த முத்தமிழால் வெளிப்படும் கலைகளில் முதன்மையானதாகத் திகழ்கின்றது. பெரிய வில் போன்ற இசைக்கருவி பக்கத்திலே துணையாகப் பிற இசைக்கருவிகள் இருக்கும். வில்லுப்பாட்டு பாடுபவர் தந்தனத்தோம் எனத் தொடங்கி வில்லை இனிய ஓசையால் எழுப்பி பார்ப்போரையும் கேட்போரையும் மகிழ்விக்கும் அற்புதக்கலை. வில்லைக் கையில் உடையவர் பாட்டின் ஒரு பகுதியைப் பாட பக்கத்தில் இருப்பவர் அதனைத் திரும்பச் சொல்லி கதை வடிவில் பாடப் பெறும் பாடல் வகை. இவ்வகையால் கடவுள் கதைகளும், புராணக்கதைகளும், சமூகசீர்திருத்த கருத்துக்களும், சமூகமுற்போக்கு சிந்தனைகளும் மக்களுக்கு எளிமையாக வில்லுப்பாட்டின் மூலம் விளக்கப்பட்டன. முக்கூடற்பள்ளு போன்ற இலக்கியங்களிலும் 'வில்லடிப்பாட்டு' எனக்குறிப்பிடப்படுவது இதன் பழமையைக் காட்டுகிறது.

## வில்லுப்பாட்டின் தோற்றம்

தென் தமிழக மாவட்டங்களில் சிறு தெய்வ வழிபாட்டுக்கு மக்கள் அதிக முக்கியத்துவம் அளிக்கின்றார்கள். பெரும்பாலும் ஏப்ரல், மே மாதங்களில்தான் சிறுதெய்வங்களை வழிபடும் திருவிழாக்கள் அதிக அளவில் தென் மாவட்டங்களில் ஊருக்கு ஊர் நடைபெறும். இந்தத் திருவிழாக் காலங்களில் ஒவ்வொரு சிறுதெய்வ கோயில்களிலும் வில்லுப்பாட்டு நிகழ்ச்சிக்கு என்று தனியொரு இடம் உண்டு. ஒவ்வொரு கோயிலிலும் சிறு தெய்வங்களுக்குப் பூஜைகள் இரவு 7 மணியில் ஆரம்பித்து 8 மணிக்கு முடிந்துவிடும். அதையடுத்து நடு இரவு ஒரு மணிக்கு சாமி காடு செல்லும் சடங்கு நடைபெறும். அதையொட்டி நடு நிசி பூஜைகள் நடைபெறும். இந்த பூஜையைப் பார்க்க பக்தர்கள் விழித்து இருப்பதற்காக, சிறு தெய்வ சிலைக்கு நேர் எதிராக அமைக்கப்பட்டிருக்கும் மேடையில் வில்லுப்பாட்டுக் கலைஞர்கள் சிறு தெய்வகளின் புராணக் கதைகளைக் கூறுவார்கள். தமிழர்களின் பண்பாடு, உணவு பழக்க வழக்கங்கள், உறவு முறை எல்லாமே இந்தக் கதையோடு ஒட்டி நகைச்சுவை கலந்து மெட்டு இசைத்துப் பாடுவார்கள் வில்லுப்பாட்டுக் கலைஞர்கள்.

இரண்டாம் நூற்றாண்டு மனிதர்கள் விலங்குகளை வேட்டையாடி உணவாக உட்கொண்ட காலம். விலங்குகளை வேட்டையாட அந்தக் காலக்கட்டத்தில் மனிதன் வில் போன்ற ஆயுதத்தையே பயன்படுத்தினர். தான் தேடிச்சென்ற விலங்கு கிடைக்காதபோதும், வேட்டை

சரியாக அமையாதபோதும், தங்கள் சோர்வு தெரியாமல் இருக்க, வில்லை கவிழ்த்தி, காய்ந்த சருகுகளை ஓட்டையிட்டு அதை வில்லின் நாணில் கோர்த்து, கைகளை நாணில் தட்டி இசைப்பார்களாம்.

விலங்குகளை வேட்டையாடுவதற்கு மட்டுமே பயன்பட்டு வந்த வில், போர் ஆயுதமாக உருவெடுத்தது. போர்வீரர்கள் போர்க் களத்தில் சோர்ந்து போய் நின்று கொண்டிருக்கும் போதும் ஏதேனும் ஓர் போர் வீரன் வில்லைத் தலைகீழாய் கவிழ்த்தி அதில் மணிகளைக் கோர்த்து, போர் வீரர்களின் சோர்வை நீக்கவும், தன்னம்பிக்கை அதிகரிக்கும் வகையிலும், தங்கள் சாகசங்களையும், தங்கள் மூதாதையர்களின் போர்த் திறமைகளையும், போரில் வெற்றிபெற்ற கதைகளையும் உரக்கச் சப்தமிட்டுப் பாடுவார்களாம். இந்த வீர எழுச்சிப் பாட்டைக் கேட்டும் ஒவ்வொரு வீரருக்கும் வீரம் கொப்பளிக்குமாம். சோர்வை விரட்டி, போரில் சண்டையிடுவார்கள் என்கிறது வரலாற்று ஆய்வேடு. எந்த இலக்கணத்திற்கும் உட்படாமல், குரலும், மனமும் போன போக்கில் உக்கிரமான மகிழ்ச்சியை அள்ளித்தரும் செய்தியாகத்தான் வில்லுப்பாட்டின் முதற்படி அமைந்தது. 15ஆம் நூற்றாண்டில் காலத்தில் அரசர்களின் புகழ்பாட அரசவையில் அருதக்குட்டி எனும் புலவரால் வில்லுப் பாட்டுக்கு இலக்கணம் அமைக்கப்பட்டதாக வரலாறு கூறுகிறது. இக்கலை பதினைந்தாம் நூற்றாண்டில் தோன்றியிருக்கலாம் என்பர். (தி.சி. கோமதி நாயகம், தமிழில் வில்லுப் பாட்டுக்கள். ப.78)[1] ஆனால் பதினெட்டாம் நூற்றாண்டு முதற்கொண்டே இது தமிழகத்தில் செல்வாக்குடன் விளங்கி வருகிறது. வில்லுப்பாட்டு ஒரு வடிவத்திற்கு வர ஆரம்பித்தது. கி.பி. 1550ஆம் ஆண்டிற்குப் பிற்பகுதியில்தான்.

***வில்லுப்பாட்டு*** எப்படி உருவானது என்பதற்குச் செவிவழிக் கதை ஒன்று உண்டு. பாண்டிய மன்னர் வில்லுடன் வேட்டைக்குப் போனார். பல விலங்குகளை வேட்டையாடினார். மாலை நேரம் வந்ததும், மன்னர் மனதில் கலக்கம். அமைச்சரிடம் "இந்த உயிர்களை இப்படிக் கொல்லுகிறோமே... நமக்குச் சந்தோஷம், அவற்றுக்கோ துன்பம். மானைக் கொன்ற பின், அதன் குட்டி எப்படித் தவிக்கிறது பார்த்தீர்களா?" என்றார். "சரி, இதற்கெல்லாம் பரிகாரம் உண்டா?" "உண்டு ராஜா... இறைவன் மீது மனமுருகப் பாடி பாவ மன்னிப்புக் கோருங்கள். இசை ஒன்றுக்குத் தான் இசைவான்" என்றார் அமைச்சர். உடனே காட்டிலேயே கச்சேரி நடத்த முடிவானது. ஆனால் பக்க வாத்தியங்கள் இல்லை. கொண்டு வந்த பொருட்களை இசைக்கருவிகளாக்கினர். வில்லைத் தரையில் வைத்து அம்பால் தட்டி இசை எழுப்பினார் மன்னர். அப்படித் தட்டும் போது வில் சரிவர நிற்காததால் தண்ணீர் கொண்டு போயிருந்த மண் குடத்தைக் கட்டித் தட்டினார். டும் டும் என்று நாதம் பிறந்து விட்டது. ராஜா பாடத் துவங்கும் முன், 'தந்தனத்தோம்' என்று அடியெடுத்துக் கொடுத்தார் அமைச்சர். மன்னர் பாடும் போது, ஆமோதிக்க வேண்டாமா? அதனால் மன்னரின் உதவியாட்கள் 'ஆமாம்' போட ஆரம்பித்தனர். அந்தப் பழக்கம் வில்லுப் பாட்டில் இன்னும் தொடர்கிறது. (மங்கையர் மலர்:டிசம்பர் 1-15, 2014. பக்.47)

**வில்லுப்பாட்டின் வகைகள்**

வில்லுப்பாட்டின் கட்டமைப்பைப் பெரும்பாலும் பின்வரும் ஏழு வகைகளாக வகுக்கலாம்:

1. காப்பு பருவம்: இந்தக் காப்பு பருவத்தில் தாங்கள் வணங்கும் தெய்வங்களைத் தங்கள் நிகழ்ச்சிக்கு வந்து துணையாக நிற்கும்படி வேண்டிக்கொள்ளும் வகையில் பாடல் பாடப் பெறும். பொதுவாக முழு முதற்கடவுள் விநாயகர் தொடங்கி, கலைகளுக்கு அதிபதி யான சரஸ்வதி தேவி வரை இந்தக் காப்புப் பருவத்தில் போற்றிப் பாடல்கள் பாடப்படும். காப்பு பாடல் உதாரண அடிகள்: "தந்தனத்தோம் என்று சொல்லியே வில்லினில் பாட வந்திடுவாய் கணபதியே" என்று தொடங்கும்.

2. வருபொருள் உரைத்தல் பருவம்: இந்தப் பருவத்தில் அன்றைய நிகழ்ச்சியில் பாடப் போகும் தெய்வத்தைப் பற்றியோ அல்லது பாடப்பெறும் கதைகளை பற்றியோ அவற்றின் சிறப்பம்சங்களுடன் முன்னுரை யாகக் கூறிப் பாடப்படுவதாகும்.

3. குருவடி தொழுதல் பருவம்: இந்தப் பருவத்தில் வில்லிசை கலைஞர்கள் தங்களுக்குக் கலையைக் கற்றுத்தந்த தங்களின் குருவைப் போற்றி பாடல்கள் பாடி மரியாதையைச் செய்வார்கள்.

4. அவையடக்கம் பருவம்: இந்தப் பருவத்தில் கதை கூறும் தங்களை ஒரு எளிய மனிதனாகப் பாவித்து, கதை கேட்கும் ரசிகர்களைப் பெரிய சான்றோராகப் பாவித்துத் தன்னடக்கத்துடன் பாடல்கள் பாடப்படும். இதில் தாங்கள் நிகழ்த்தப் போகும் வில்லுப் பாட்டு நிகழ்ச்சியில் ஏதேனும் குற்றங்கள் அல்லது பிழைகள் இருந்தால் பொறுத்துக் கொள்ளும்படியும் வேண்டுதல் செய்யப்படும்.

5. நாட்டு வளம் கூறும் பருவம்: இந்தப் பருவத்தில் அந்தந்த பகுதியின் நாடு வளங்கள் மையமாக வைத்துப் பாடல்கள் பாடப்படும். குறிப்பாக இந்த வில்லுப் பாட்டு பிரபலமான தென் மாவட்டங்கள் பாண்டிய நாட்டின் எல்லைக்குள் வரும் என்பதால் பாண்டிய நாட்டின் பெருமைகள் பற்றிப் பாடப்படும்.

6. கதைக்கூறு பருவம்: இந்தப் பருவத்தில் தான் முக்கியமான கிராம தெய்வத்தின் கதை அல்லது அன்று படுக்கப்போகும் இதிகாசக் கதைகள் பாடல்களுடன் கூடிய வாய்ப்பேச்சாக நிகழ்த்தப்படும். இது தான் இந்த வில்லுப்பாட்டு நிகழ்ச்சியின் முக்கிய மான பகுதியாகக் கருதப்படுகிறது.

7. வாழ்த்துப் பாடுதல் பருவம்: இந்தப் பருவத்தில் இறுதியாகச் சபையில் கூடியிருந்து தங்கள் நிகழ்ச்சியை ரசித்துக் கேட்ட மக்கள் அனைவரையும் பல்லாண்டு வாழ வாழ்த்தும் வகையில் பாடல்கள் பாடப்படும்

### வில்லுப்பாட்டு பாடப்படும் இடங்கள்

வில்லுப்பாட்டு ஆனது சிறுதெய்வ கோயில்களில் பாடப்படுகிறது சிறு தெய்வங்களின் வரலாற்றுக் கதைகளை வில்லுப்பாட்டின் மூலம் கலைஞர்கள் பாடுகின்றனர் தற்போது திருவிழாக்களிலும் வீட்டு நிகழ்ச்சிகளிலும் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் பாடப்பட்டு வருகிறது. மன்னர்களையும் சிறு தெய்வங்களையும் புகழ்ந்து பாடிய வில்லுப் பாட்டு ஆனது தற்போது மனிதர்களையும், நிகழ்ச்சிகளையும், இடங்களையும் புகழ்ந்து பாடும் கலையாக மாற்றம் பெற்றுள்ளது.

அம்மன் கோயில்களில் திங்கள், செவ்வாய், புதன் கிழமைகளிலும் மாடன் கோயில்களில் வியாழன், வெள்ளி, சனிக்கிழமைகளிலும் நடைபெறும் விழாக்களில், ஒரு நாள் நிகழ்ச்சியாகவோ அல்லது மூன்று நாள் நிகழ்ச்சியாகவோ வில்லிசை நிகழ்ச்சி இடம் பெறுகிறது. கார்த்திகை மாதத்தில் அம்மன் கோயில்களில் செவ்வாய்க்கிழமைகளிலும் மாடன் கோயில்களில் வெள்ளிக்கிழமைகளிலும் ஒரு நாள் நிகழ்ச்சியாக வில்லிசை நிகழ்கிறது. ஏனைய அனைத்து மாதங்களிலும் இறுதிச் செவ்வாய் அல்லது வெள்ளிக் கிழமையில் ஒரு நேர நிகழ்ச்சியாக இக்கலை நிகழ்த்தப்படுகிறது.

### வில்லுப்பாட்டுக் குழுவினர்

வில்லுபபாட்டுக் குழுவில் குறைந்தது ஐவரும் அதிகபட்சம் எண்மரும் இடம் பெறுவர். ஒரே குழுவில் வெவ்வேறு வயதுடையவர்கள் இடம் பெற்றிருப்பதைக் காணலாம். ஒரே குழுவில் பள்ளர், தேவர் முதலான வெவ்வேறு சாதியைச் சேர்ந்தவர்கள் இடம் பெற்றிருத்தலைக் கூட காணலாம். ஆறுமுகப் பெருமாள் நாடார், மு.பெருமாள் நாடார் போன்றோர் வில்லுப்பாடல்களை மிகுதியாகப் பதிப்பித்தவர்கள் நா.வானமாமலை, தி.சி.கோமதி நாயகம், தி.நடராசன், ஏ.என்.பெருமாள், நா.இராமச்சந்திரன், ஆ.சிவசுப்ரமணியன், சு.சண்முகசுந்தரம், லாரன்ஸ் போன்ற பலரும் வில்லிசைப் பாடல்களைப் புதுப்பித்து இருக்கின்றனர்.

### பெரும்பாணாற்றுப்படையில் வில்லுப்பாட்டு

......... *குமிழின்*
*பழற்கோட்டுத் தொடுத்த மரற்புரி நரம்பின்*
*வில் யாழிசைக்கும் விரலெறி குறிஞ்சி*

வரிகளுக்குக் குமழ மரவில்லில் மரநாராலான நாணைக்கூட்டி கடியலூர் உருத்திரங் கண்ணனார் குறிஞ்சிப் பண் பாடினார் எனப் பொருள் கொண்டு வில்லுப்பாட்டு சங்க காலத்தில் இருந்திருக்கிறது என்கின்றனர். (அ.கா. பெருமாள், சடங்கில் கரைந்த கலைகள் பக் 26)[3] பாணர் கைவழி யாழ் என்னும் நூலில் கள்ளிக்கோட்டைக்கு அருகே பெருந்தல் மன்னை என்னும் சிற்றூரை அடுத்துள்ள காட்டில் மாடு மேய்த்துக் கொண்டு பிச்சை எடுத்து வாழும் புள்ளுவர் என்பவர்கள் தன் கையில் உள்ள ஒரு வகை யாழை இசைத்தவாறு பாடுகின்றனர் என்றும் இது வில் பாட்டு என்று அழைக்கப் படுவதாகவும் இப்பாட்டில் எழுபது விழுக்காடு தமிழ்ச்சொற்கள் இருக்கின்றன என்றும் வரகுண பாண்டியர் கூறும் கருத்தைக் கோமதிநாயகம் மேற்கோள் காட்டுகிறார் (பக்-5)

முக்கூடற்பள்ளு, விறலிவிடு தூது

முக்கூடலற்பள்ளு நூலில் வரும் மூத்த பள்ளி பள்ளனைக் குறித்து பண்ணை காரனிடம் முறையிடும்போது

*.....புதியவன்*

*ஊட்டுக்கும் குறித்தான் வில்லடிப்*

*பாட்டுக்கும் பொறித்தான்*

*என்றும்*

*ஆருக்கும் பணியான் - சீவலப்*

*பேருக்ள் கணியான் - வில்லென்றும்*

*அரிப்பிட்டுப் போட்டான் - பள்வரி*

*தெரிப்பிட்டு கேட்டான்*

என்றும் கூறுகிறாள். (அ.கா. பெருமாள், சடங்கில் கரைந்த கலைகள் பக் 27)[4]

அதிருபரத்தினம் என்னும் தாசியும் அவள் தாயும் நடன லிங்கப்பட்டனின் செல்வத்தைச் சீரழித்த கதையைத் தெய்வச் சிலையாள் விரலிவிடு தூது

*மாடனென்ற தேவதைக்கு வச்சு வணங்குவானாம்*

*ஆடு பன்றி கோழி இவை அல்லாமல் பாடுகின்ற*

*வில்லாம் முரசாம் கைவெட்டுக் கனியானாம்*

*எல்லா வகைக்கும் எழுபது பொன் செல்லுமென்று*

எனக் குறிப்பிடுகிறது (வையாபுரிப் பிள்ளை, குமாரசாமி அவதானியார் விறலி விடு தூது பக் 32)[5] இவ்விரு நூல்களிலும் வில்லுப் பாட்டு நாட்டுப்புற தெய்வக் கோயில்களுடன் நடத்தப்படுவதாகவே காட்டப்படுகிறது. கவிமணியில் மருமக்கள் வழி மானியம் நூலில் வரும் காரணவர் மருமகனிடம் தனக்கு ஏற்பட்ட செலவை விவரிக்கும் போது ஆண்டுதோறும் ஆலடி மாடன்

கொடைக்கு ரூபாய் கொஞ்சமா செல்லும்

போன கொடைக்குப் புதியதாய் வந்த வில்லுக்காரி வீரம்மைக்கு

நாலு சேலையும் நாற்பதும்

கொடுத்தது

என்கிறார். (மான்மியம் 1916ஆம் ஆண்டில் ஆண்டளவில் தமிழன் பத்திரிகை)[5]

வில்லுப்பாட்டு என்னும் கலையின் பழமையை அறிய சரியான சான்றுகள் 17ஆம் நூற்றாண்டில் இருந்து தான் கிடைக்கப் பெற்றுள்ளன சிற்றிலக்கிய வகையான முக்கூடற்பள்ளு வில்லடிப்பாட்டு எனும் குறிப்பிடுவதால் இந்நூல் எழுதப்பட்ட 1676, 1682 காலகட்டங்களில் இக்கலை சாதாரண மக்களிடம் பேசப்பட்டது என்பதை அறியலாம்.

16ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் உள்ள முக்கூடற்பள்ளு 'பாடுகின்ற விள்ளாம்" என வில்லுப்பாட்டு குறிப்பிடப்படுகிறது. இந்நூலில் நாட்டுப்புற தெய்வங்களின் விழாக்களில் மட்டும் இன்றி தனிப்பட்டவர்கள் நடத்தும் விழாக்களிலும் வில்லுப்பாட்டு நிகழ்த்தப் பட்டதாக குறிப்பு வருகிறது. இதனால் இக்கலை 16ஆம் நூற்றாண்டில் வழக்கில் இருந்ததாக அறியலாம்.

## முடிவுரை

வில்லுப்பாட்டானது மக்களது உள்ள உணர்ச்சியோடு ஒன்றி வளரும் கலையாக உள்ளது. நாடகத்தன்மை மிகுந்த நிலையில் கதை கூறலில் இது உருவாக்கித் தரும் பயன்பாடுகள் பலவாகும். மிகச்சிறந்த கதைக் கூற்றரங்கு என்ற நிலையை வில்லுப் பாட்டுப் பெறுகிறது. மரபு வழிக் கதைகள் முதல் இன்றைய அறிவியல் வளர்ச்சி நிலைகள் வரை வில்லுப்பாட்டு மூலம் மக்களைச் சென்றடைகிறது.

தமிழுக்குத் தனித்துவம் வாய்ந்த இலக்கிய வடிவத்தை வில்லுப்பாட்டு பங்களிப்புச் செய்துள்ளது. இதனை வாய்மொழி இலக்கிய மாகக் கொள்ளலாம். ஆனால் செவிக்குத் தேனாக விருந்து படைக்கும் இலக்கியம் இது. எந்தக் கால அளவுக்குள்ளும் ஒரு கதையினைப் படைத்துக்காட்ட ஏற்ற நாடக வடிவம் இது. மக்களையும் கதையின் போக்கினூடே ஒன்றவைத்துக் கதை கூறும் வடிவமாக வில்லுப்பாட்டு திகழ்கிறது.

## துணைநூற்பட்டியல்

1. தி.சி. கோமதி நாயகம், தமிழில் வீல்லுப்பாட்டுக்கள். ப.78.
2. மங்கையர் மலர்:டிசம்பர் 1-15, 2014. பக்.47
3. அ.கா. பெருமாள், சடங்கில் கரைந்த கலைகள் பக்.26
4. அ.கா. பெருமாள், சடங்கில் கரைந்த கலைகள் பக்.27
5. வையாபுரிப் பிள்ளை, குமாரசாமி அவதானியார் விறலி விடு தூது பக்.32